Koviloor Digital Library
3516
A. No. 5442
5442
R65

உ

ஓம் தத் சத்
பரப்பிரஹ்மணே நம:

மௌனகுரு

ஸ்ரீமத் சாது நித்தியானந்தம்மையாரவர்கள்

ஞானாநுபூதி

இது கோவிலூர் பரம்பரை, சத்திரப்பட்டி
ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய ஞான தேசிக சுவாமி
அவர்களாதீனத்தின் வழிவந்த
சிவகாசி மாநகர்க்கருகிலுள்ள விஸ்வநகர்
ஸ்ரீலஸ்ரீ சண்முகானந்த ஞான தேசிக
சுவாமியவர்களின் பிரதம சிஷ்யையும், ஆத்ம
ஞானியுமான, மதுரை ஜில்லா, திருமங்கலம்
தாலூகா, வ. சுப்புலாபுரம்

சாது-நித்தியானந்தம்மாள்

அவர்களால் இயற்றப்பெற்று,
அவருடைய சீடராகிய, வன்னிவேலமாநகர்

திரு. வே. கிருஷ்ணசாமி அவர்களால்

தொகுக்கப்பெற்று

மதுரை, எக்ஸெல்ஸியர் பவர் பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

மார்ச்சு 1962.

பதிப்புரிமை] : : [அன்பளிப்பு.

2813/58

Koviloor Digital Library

Koviloor Digital Library

354

உ

ஓம் தத் சத்

பரப்பிரஹ்மணே நம:

10-1

மௌனகுரு

ஸ்ரீமத் சாது நித்தியானந்தம்மையாரவர்கள்

ஞானநுபூதி.

இது கோவிலூர் பரம்பரை, சத்திரப்பட்டி

ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய ஞான தேசிக சுவாமி

அவர்களாதீனத்தின் வழிவந்த தீனம்

சிவகாசி மாநகர்க்கருகிலுள்ள விஸ்வநகர்

ஸ்ரீலஸ்ரீ சண்முகானந்த ஞான தேசிக

சுவாமியவர்களின் பிரதம சிஷ்யையும், ஆத்ம

ஞானியுமான, மதுரை ஜில்லா, திருமங்கலம்

தாலூகா, வ. சுப்புலாபுரம்

சாது-நித்தியானந்தம்மாள்

அவர்களால் இயற்றப்பெற்று,

அவருடைய சீடராகிய, வன்னிவேலமாநகர்

திரு. வே. கிருஷ்ணசாமி அவர்களால்

தொகுக்கப்பெற்று

கோவிலூர் ஆதீனம் கோவிலூர்-630 307 Acc 5442

மதுரை, எக்ஸெல்ஸியர் பவர் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

மார்ச்சு 1962.

பதிப்புரிமை.] : : [அன்பளிப்பு.


Koviloor Digital Library

முதற்பதிப்பு—1962.



Koviloor Digital Library

ஓம்



ஸ்ரீ ஆறுமுகக் கடவுள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

10-1

ஓம் தத் சத்.

பரப்பிரஹ்மணே நம:



ஸ்ரீலஸ்ரீ சண்முகானந்த ஞான தேசிக சுவாமிகள்.

—(::)—

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஓம் தத் சத்,

பரப்பிரஹ்மணே நம:



ஸ்ரீமத் சாது - நித்தியானந்த அம்மையார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஓம் தத் சத்
பரப்பிரஹ்மணே நம:

முகவுரை.

—(::)—

ஸ்ரீ-ஜகத்குரு சங்கர பகவத் பாதாச்சாரியார் சுவாமி யவர்களுடைய திருவடிகளுக்கு வணக்கம்.

இந்நூல் ஸ்ரீமத் சாது நித்தியானந்தம்மையார் அவர்களுடைய ஞானுநுபூதி. அதாவது அம்மையா ரவர்கள் பத்தாண்டு காலம் மௌனமாக யிருந்து பின் ஞானசக்தியின் திருவருட்கடாட்சம் பெற்று தேவியுடன் இரண்டறக் கலந்து மெய்மறந்து திருவாய்மலர்ந் தருளிய சம்பாஷணையேயாகும்.

தாயுமான சுவாமிகள் பாடலில் கஎ. நின்வொன் றுப் பிரிவில் "ஞானிகளிடம் பொருளேவல்" உட்பிரிவில் ஒன்பது செய்யுட்களும், ஸ்ரீ திரிபுரா ரகசியம் ஞான காண்டத்தில் "வித்தியா கீதையின்" சுருக்கத்தில் பரா வர ஞானிகளுடைய நிலையைச் சாக்ஷாத் வித்தியா தேவி யானுலேயே நிரூபிக்கப்பட் டிருப்பதினுல், இதனைத் தினந்தோறும் சிரவண மனனஞ் செய்தால் பாப சமூ கங்கள் நாசமாகியும், நிதித்யாசனத்தால் தன்னுத்ம ஸாம்பிராஜ்யத்தையும். அத்தேவி பிரசன்னையாகித் தானே சுயமாக ஞானத்தை அளிக்கின்ருளெனவும், ஞானிகளுடைய நிலைமையை உணர உத்தமமான இப் பகுதி உதவுமெனவுங் கருதியும், மேலும் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருட்பாவில் இரண்டு செய்யுட்களும் சேர்க் கப்பட்டுள்ளது.

இந்நூல் அம்மையாரவர்களுடைய திருவருட் கடாட்சத்தாலும், பெரியோர்களுடையவும், பேராசிரியர்

Koviloor Digital Library

களின் நூல்களுடையவும் உதவி கொண்டு எழுதப்பட்ட தாதலின் ஞான சற்குரு தாயவர்களுக்கும், பெரியோர் களுக்கும் அடியேன் அனந்தமான வந்தனமளிக்கிறேன்.

இதிற் சிற்சில குறைகளிருப்பின் அறிஞர்கள் அவற்றைத் திருத்தியமைத்துக் கொள்ளுமாறு மிகத் தாழ்மையுடன் வணங்கி அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

இந்நூல் இலவசப் பதிப்பாக வெளி வருவதற்குப் பொருளுதவி நல்கிய தாயம்மையவர்களுடைய சீடரும், நாகபட்டிணம் திருவாளர் A. K. P. துரைச்சாமி நாடார் அவர்களுடைய இல்லக் கிழத்தியுமான ஸ்ரீமதி மரகதவல்லி அம்மாள் அவர்களுக்கு உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

நிற்க இதற்குமுன் இயற்றிய "வேதாந்த சாஸ்திர சங்கிரகம்", "வேதாந்த சாஸ்திரப் பலதிரட்டுப் பாடல்" என்ற இரு நூல்களைக் கற்று அதன் மூலம் வேதாந்த அபரோக்ஷஞானத்தை அடைந்துள்ள வேதாந்திகள் அனைவரும் அம்மையார் அவர்களுடைய ஞானநுபூதி யைப் பெற்று சிரவண, மனன, நிதித்தியாசனத்தால் பிரமான்ம ஐக்ய ஞானமுற்று சர்வதுக்க நிவர்த்திப் பிரஹ்மாநந்தப் பிராப்தி வடிவ மோட்ச சுகமடைய எல்லாம் வல்ல ஞான சக்தியின் பரிபூரண திருவருட் கடாட்சம் பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்

கிருஷ்ணசாமி,

வன்னிவேலம் பட்டி P. O.

Koviloor Digital Library

பொருளடக்கம்.

நிர்.	பொருள்.	பக்கம்.
1.	ஸ்துதிகள் ...	vi
2.	தாயுமான அடிகள்—திருப்பாடல்கள் ...	8
3.	மௌனகுரு ஸ்ரீமத் சாது நித்தியானந்தம்மையார் அவர்களுடைய ஞானநுபூதி ...	11
4.	ஸ்ரீ திரிபுரா ரகசியம்—ஞானகாண்டம் வித்தியா கீதைச் சுருக்கம் ...	18
5.	ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருட்பா ...	31
6.	வாழ்த்து ...	31

Koviloor Digital Library

ஸ்தோத்திரப் பாக்கள்.

விநாயகர் ஸ்துதி.

மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங்
கரைகாண்பான் முதிர்ந்த நாலாம்
பாகமெனும் மலர்கொண்டு பத்தியெனும்
புனலாட்டிப் பரிந்து சாத்திச்
சோகமெனப் பாவித்துத் துரியமெனும்
விளக்கேற்றிச் சோக நீங்கி
பாகமெனுங் கோயிலின்க ணறிவென்னுங்
கணபதிக்கே யன்பு செய்வாம்.

முருகன் ஸ்துதி.

ஆறு முகவனை நாறு மலர்கொடு
கூறு மடியவர் பேறு பெறுவரே.

ஸ்ரீலஸ்ரீ சண்முகானந்த ஞான தேசிக சுவாமி சற்குரு ஸ்துதி.

கோசமாங் குகைக்குள் வாழ்ந்துகொடு நாசமாய்ப்
போகும்போது
பாசமாங் கட்டவிழ்த்துப் பரமனுயாக்க வென்று
ஈசனே ஆசானுகி இன்புடனிங்கு வந்த
மாசறு ஜோதி யுந்தன் மலரடி போற்றி போற்றி.

ஸ்ரீமத் சாது நித்தியானந்தம்மாள் ஸ்துதி.

சத்திய சொரூபமாகத் தரணியில வதரித்து
சுத்தியகு லரசிதம்போலத் தோன்றிய உலகமென்
மித்தை யிதுவென்றும் மிகமிக உபதேசித்து [றும்
முக்தியை யடைந்திருக்கும் நித்தியா னந்தம்மாள்.

Koviloor Digital Library

உ
ஓம் தத்சத்
பரப்பிரஹ்மணே நம:

குருபரம்பரை ஸ்துதி.

ஆதிகுரு வாங்-கிரே தாயுகந் தன்னிலிங்கு
அவதரித்த தத் தாத்திரேயர்
அடுத்துவரு திருதாயுகந் தனில்வந்த சற்குரு
அருள்பெருகு கௌட பாதர்
சோதிமய மாந்துவா பரயுக முதித்தகுரு
தூயனும் வியாச பகவான்
சொன்னதொரு கலியுக ஜகத்குரு சங்கரர்
துணைப்பதம் போற்றி போற்றி.

பாதிமதி யணியீசன் அருளுமுயர் சரவண
பவானந்த னடிகள் போற்றி
பரமசற் குருவான சண்முகா னந்தனிரு
பாதங்கள் போற்றி போற்றி
கோதில்மொழி பகருநித் தியானந்த தாயினிரு
குளிர்பாதம் போற்றி செய்தே
குருகடா ட்சம்பெருகு மெஞ்ஞான போதத்தைக்
குலவி அஞ்சலி செய்குவாம்.

ராமையா,
திருக்குறள் அஷ்டாவதானி,
சாலிச்சந்தை,
திருமங்கலம் தாலூகா,
மதுரை ஜில்லா.

Koviloor Digital Library

உ
ஓம் தத் சத்
பரப்பிரஹ்மணே நம:

தாயுமான அடிகள்

திருப்பாடல்கள்.

நினைவொன்று

ஞானிகளிடம்.

நினைவொன்று நினையாமல் நிற்கின் அகம் என்பார்
நிற்குமிட மேயருளாம் நிட்டையரு ளொட்டுந்
தனையென்று மறந்திருப்ப அருள்வடிவா னதுமேல்
தட்டியெழுந் திருக்குமின்பந் தன்மயமே யதுவாம்
பினையொன்று மிலையந்த இன்பமெனும் நிலயம்
பெற்றூரே பிறவாமை பெற்றூர்மற் றுந்தான்
மனையென்றும் மகவென்றுஞ் சுற்றமென்றும் அசுத்த
வாதனையாம் ஆசைமொழி மன்னுெருசொற்
கொண்டே. 1

ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும் அந்த
ஒருமொழியே மலம்ஒழிக்கும் ஒழிக்குமென
மொழிந்த
குருமொழியே மலையிலக்கு மற்றைமொழி யெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்
குருமொழியிங் குணக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங்கண்
டனைமேல்
தருமொழியிங் குணக்கில்லை யுன்னைவிட்டு நீங்காத்
தற்பரமா யானந்தப் பொற்பொதுவாய் நில்லே. 2

Koviloor Digital Library 5442 R65

நில்லாத ஆக்கைநிலை யன்றனவே கண்டாய்
நேய அருள் மெய்யன்றோ நிலையமதா நிற்கக்
கல்லாதே ஏன்படித்தாய் கற்றதெல்லாம் மூடங்
கற்றதெல்லாம் மூடமென்றே கண்டனையும் அன்று
சொல்லாலே பயனில்லை சொல்முடிவைத் தானே
தொடர்ந்துபிடி மர்க்கடம்போல் தொட்டதுபற்
றுநில்
எல்லாரும் அறிந்திடவே வாய்ப்பறைகொண் டடிநீ
இராப்பகலில் லாவிடமே எமக்கிடமென் றறிந்தே. 3

இடம்பொருளே வலைக்குறித்து மடம்புகுநா யெனவே
எங்கேநீ யகப்பட்டா யிங்கேநீ வாடா
மடம்பெறுபாழ் நெஞ்சாலே அஞ்சாதே நிராசை
மன்னிடமே இடம்அந்த மாநிலத்தே பொருளுந்
திடம்பெறவே நிற்கினெல்லா உலகமும்வந் தேவல்
செய்யுமிந்த நிலைநின்றோர் சனகன்முதல் முனிவர்
கடம்பெறுமா மதயானை என்னவுநீ பாசக்
கட்டான நிகளபந்தக் கட்டவிழ்ப் பாரே. 4

பாராதி யண்டமெல்லாம் படர்கானற் சலம்போல்
பார்த்தனையே முடிவில்நின்று பாரெதுதான் நின்ற
தாராலும் அறியாத சத்தன்றோ அதுவாய்
அங்கிருநீ யெங்கிருந்தும் அதுவாவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாய் புத்தியைநாட் டாதே
ஓராதே ஒன்றையுநீ முன்னிலைவை யாதே
உள்ளபடி முடியுமெலாம் உள்ளபடி காணே. 5

உள்ளபடி யென்னவுநீ மற்றொன்றைத் தொடர்ந்திட்
டுளங்கருத வேண்டாநிஷ் களங்கமதி யாகிக்

Koviloor Digital Library

கள்ளமனத் துறவைவிட்டெல் லாந்துறந்த துறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்குல்பக லற்ற
வெள்ளவெளிக் கடல்மூழ்கி யின்பமயப் பொருளாய்
விரவியெடுத் தெடுத்தெடுத்து விள்ளவும்வா யின்றிக்
கொள்ளைகொண்ட கண்ணீருங் கம்பலையு மாகிக்
கும்பிட்டுச் சகம்பொயெனத் தம்பட்ட மடியே. 6

அடிமுடியும் நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டால்
அத்துவித ஆனந்த சித்தமுண்டாம் நமது
குடிமுழுதும் பிழைக்குமொரு குறையுமில்லை யெடுத்த
கோலமெல்லாம் நன்றாகுங் குறைவுநிறை வறவே
விடியுமுத யம்போல அருளுதயம் பெற்ற
வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதுந் தந்தாலுங் களியாப்
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் வருமே. 7

வரும்போமென் பனவுமின்றி யென்றுமொரு படித்தாய்
வானுதி தத்துவத்தை வளைந்தருந்தி வெளியாம்
இரும்போகல் லோமரமோ என்னும்நெஞ்சைக் கனல்மேல்
இட்டமெழு காவுருக்கும் இன்பவெள்ள மாகிக்
கரும்போகண் டோசீனிச் சருக்கரையோ தேனோ
கனியமிர்தோ எனருசிக்குங் கருத்தவிழ்ந்தோருணர்வார்
அரும்போநன் மணங்காட்டுங் காமரசங் கன்னி
அறிவாளோ அபக்குவர்க்கோ அந்நலந்தான் விளங்கும்? 8

தானேயும் இவ்வுலகம் ஒருமுதலு மாகாத்
தன்மையினாற் படைத்தளிக்குந் தலைமையது வான

Koviloor Digital Library

கோஞக வொருமுதலிங் குண்டெனவும் யூகங்
கூட்டியதுஞ் சகமுடிவிற் குலவுறுமெய்ஞ் ஞான
வாஞக அம்முதலே நிற்குநிலே நம்மால்
மதிப்பரிதாம் எனமோனம் வைத்ததும்உன் மனமே
ஆனுலும் மனஞ்சடமென் றழுங்காதே யுண்மை
அறிவித்த இடங்குருவாம் அருளிலதொன் றிலேயே. 9

உ

ஓம் தத்சத்
பரப்பிரஹ்மணே நம:

மௌனகுரு
ஸ்ரீமத் சாது நித்தியானந்தம்மையார்
அவர்களுடைய ஞாஞநுபூதி.

ஸ்ரீமத் சாது நித்தியானந்தம்மையாரவர்கள் விக்ருதி ஆண்டு தைத் திங்கள் உத்திராயண புண்ணிய காலத்தில் தன்னையும் தலைவனையுமறியாது இயற்கையாக மௌனவிரதம் ஆரம்பித்து சுமார் ஒரு மண்டல காலம் வரை முக்கால் பாகம் அநுஷ்டித்தார்கள். பின்பு சற்குரு ஸ்ரீலஸ்ரீ சாது சண்முகானந்த ஞான தேசிக சுவாமியவர்களுடைய அநுக்கிரகத்தால் மாசித் திங்கள் அமாவாசைத் திதி அருணோதய காலமுதல் பூரண மௌனம் பூண்டார்கள்.

2. பூலோகத்தில் தேவகணமாகவும், மனுஷ கணமாகவும் ஜனித்த மகான்கள் ஞானமடைந்து மௌன விரதம் அநுஷ்டிப்பது வழக்கம். இதில் சிலர் தனித்திருந்து யோக நிஷ்டை கூடி சில ஆண்டுகள்

Koviloor Digital Library

வரை சமாதியுற்றிருப்பதும் உண்டு அவர்களிடம் யாரும் நெருங்கிப் பேசவோ, எழுதிக் காண்பிக்கவோ முடியாது. வேறுசிலர் மௌன விரதத்தோடு தேச சஞ்சாரம் செய்து ஆன்மாகார விருத்தி குன்று மோன நிலையிலிருந்து ஆங்காங்கு மனபரி பக்குவமடைந்த முமூட்சுக்களுக்கு உபதேசம் சொல்லியும், அநுபூதி வாக்கியங்களை நூல்கள் மூலமாக வெளியிடுவதும் உண்டு.

3. அவ்வாறே, அம்மையாரவர்கள் மனபரி பக்குவ மடைந்த சில மெய்யன்பர்களுக்கு மௌன விரதத்தோடு சிவ பஞ்சாட்சர மந்திரம், மகாவாக்கிய உபதேசம் சொல்லியருளினுர்கள். திருக்குற்றுலத்தில் கைப்பிச்சை யெடுத்து உணவருந்தினுர்கள். பின்பு, புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்க எண்ணி காசி யாத்திரையை மேற்கொண்டு யாத்திரை வண்டியில் சென்று வடக்கே யுள்ள முக்கியமான ஸ்தலங்களையும் பின், தெற்கே இராமேஸ்வரம் உட்பட குமரிமுனை வரையிலுள்ள எல்லா புண்ணிய ஸ்தலங்களையும் தரிசித்தார்கள். பின்பு, மௌன விரதத்தோடு கூட காலம் வீணுகாமல் உலக மக்களுக்கு உபகாரமாயிருக்கும் பொருட்டு அம்மையாரவர்கள் தான் கற்ற ஞானசாஸ்திரத்தின் பயனுகவும், குருவாக்கியத்தின் வலிமையாலும், அநுபூதி வாயிலாகக் கண்ட உண்மைகளைச் சிஷ்யர்களிடம் எழுதிக் காண்பித்து "வேதாந்த சாஸ்திர சங்கிரகம்" "வேதாந்த சாஸ்திரப் பலதிரட்டுப் பாடல்" என்ற இரண்டு நூல்களை வெளியிட்டார்கள்.

4. பின்பு அம்மையாரவர்கள் தூத்துக்குடி, குற்றுலம், இலஞ்சி, திருநெல்வேலி, திருச்செந்தூர்,

Koviloor Digital Library

விக்கிரமசிங்கபுரம், சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, விருதுநகர், அருப்புக்கோட்டை, மதுரை, உசிலம்பட்டி, போடி, சாலிச்சந்தை, வத்திராயிருப்பு, சுப்புலாபுரம், வன்னிவேலம்பட்டி முதலிய இடங்களுக்கு உலகோபசாரமாக சஞ்சார சமாதி செய்து மெய்யன்பர்களுக்கு ஞானபோதமும், உபதேசமும் சொல்லி வந்திருக்கிறார்கள்.

5. திருச்செந்தூர், குற்றாலம், பாபநாசம் முதலிய ஸ்தலங்களில் தன்னை மறந்து தரிசனம் செய்து வருங்கால் சார்வரி ஆண்டு தைத்திங்கள் உத்திராயண புண்ணிய காலத்திலிருந்து மௌனவிரதம் முடிவுறுங் காலம் நெருங்குவதாக தன்னுள்ளேயே உணர்ந்தார்கள். மாசித்திங்கள் 4-ம்நாள் புதன் கிழமை அமாவாசை திதியன்று மௌனவிரதம் அநுஷ்டித்து பத்தாண்டு காலம் பூர்த்தியுறவே பாபவினாசர் ஆலய தரிசனம் செய்து தங்கியிருந்தபோது அம்மையாரவர்கட்கு குருவின் அநுக்கிரகத்தால் ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களுடைய தரிசனங்கள் நேரில் காண்பது போல் காட்சியும், பேசுவதுபோல் தோற்றமும் தன்னுள்ளேயே கண்டு பேரானந்தமடைந்தார்கள்.

6. ஆனால் பத்தாண்டுகாலம் மௌன விரதமுற்று துரியாதீத நிலையில் ஞான முத்துக்கள் விளைவுற்றதானது விரதம் கலைய ஆரம்பமானதும் நீர்த்தேக்கத்திலிருந்த நீர் எவ்வாறு சிறிது கசிவு ஏற்பட்டுப் பின் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருக்கெடுத்து ஓட ஆரம்பிக்கிறதோ அவ்வாறு தன்னுள்ளேயே பேசுவதற்குக் குறிகள் காணவும், அடைகிடந்த வயது முதிர்ந்த நல்ல பாம்பானது வெள்ளிக் கிழமைகளில் வெளிப்

Koviloor Digital Library

பட்டு சிறிது ஆகாரம் உட்கொண்டு தனது சட்டையை கழற்றிவிட்டு வேறு யாரையும் அருகே நெருங்க விடாதது போலவும் அம்மையாரவர்கள் அன்ன, ஆகாரம், உடை, ஸ்நானபானுதிகளில் வெறுப்புற்று ஒரே விரக்தியாக சஞ்சார சமாதி கலையாது பாபனுசம் விட்டுத் தூத்துக்குடி சென்றூர்கள். பங்குனித் திங்கள் 3-ம் நாள் அமாவாசை திதியையடுத்து வளர்பிறை வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ சிவன்கோவிலுக்குச் சென்று அருள்மேலீட்டு காலை மணி சுமார் 6 முதல் 1 மணி நேரம் நிஷ்டையிலிருந்து தன்னிலையறியாது அன்பர்களுடைய உதவியால் சச்சிதானந்த சபையை அடைந்தார்கள். இருதினங்கள் கழிந்து, மதுரை, நாகப்பட்டினம், சிதம்பரம், சென்னை சென்றூர்கள். சென்னையில் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் மடாலயத்துக்குச் சென்று விட்டு நிலைகொள்ளாமல் மறுபடியும் நாகப்பட்டினம் திரும்பினூர்கள். திரிகாலங்களையும் உணரும் ஞானிகள் வருங்காலத்தை முன்பே உணருவதுபோல மறுநாள் புத்தாடை அணிந்து கோவில் சென்று திருவாய் திறந்து பேசப்போவதை முன்கூட்டியே யுணர்ந்தார்கள். அப்படியே வெள்ளிக்கிழமையன்று புத்தாடை அணிந்து கொண்டார்கள்.

7. சார்வரி ஆண்டு பங்குனித் திங்கள் 19-ம் நாள் (1—4—61) சனிவாரம் காலை 6 மணிக்கு சிஷ்யை மரகதவல்லி அம்மாள் குமாரன் ஜெயவீர பாண்டியன் வீட்டினுடைய தோட்டத்தின் ஒரு பக்கமுள்ள பழமையான கோவிலில் அம்பாள் ஞானசக்தியை நினைத்து, உருகி ஆனந்தக் கண்ணீர் மல்கி திருவாய் மலர்ந்து

Koviloor Digital Library

முதன் முதலாவதாக ஹரி ராம பஜனைப் பாட்டுப் பாடினார்கள்:

" அரே ராம அரே ராம ராம ராம அரே அரே
அரே கிருஷ்ணு அரே கிருஷ்ணு கிருஷ்ண கிருஷ்ண
அரே அரே"

பின்பு

"வேல்முருகா வேல்முருகா வேல்முருகா குகனே
வேலாயுதா வேலாயுதா வேலாயுதா வேலனே"—

என்றவாறு சுமார் அரைமணி நேரம் துதி செய்து, ஞானசக்தியுடன் ஜோதி சொரூபமாய் ஐக்கியப்பட்டுச் சம்பாஷணை ரூபத்தில் அருள் மொழி பொழிய ஆரம்பித்தார்கள் அதாவது: அம்மையாரவர்கள் தேவியிடம் குறையைச் சொல்லுகிறார்கள்.

" தாயே! நான் என் செய்தேன்? அம்மா, என்னை ஏன் இப்படிப் பிழிந்து எடுக்கின்றாய்?" என்று மனங் கசிந்து அழுதுகொண்டு " நான் என் செய்தேன்? எந்த இடத்தில் இருப்பேன்? நிலையில்லாமல் என்னை இப்படி ஆட்டுகின்றாயே?" என இவ்வாறு வினவ அம்பாள் ஜோதி சொரூபமாய் " நீ ஏன் அழுகிறாய்? உனக்கு உண்பதற்கும், உடுப்பதற்கும், இருக்க இடமும் கொடுத்திருக்கிறேன். இன்னும் என்ன செய்ய வேண்டும்? என்னால் பொறுக்க முடியவில்லை. இனி உன்னைக் காற்றாகத் தூக்கிக் கொண்டு போய்விடுவேன்" என்று விடையளித்துப் பின்னும் " நான் உலகுக்கு ஓர் உத்தமமான ஞானியை அனுப்பினேன். அதை அறிய இயலாத பக்தர்கள் இருக்கின்றார்கள். அதற்கு நான் என்ன செய்வேன்? எவ்வளவு நாள் பொறுப்பது?" என

Koviloor Digital Library

ஞான சக்தியே தனதுள்ளே உதயமாகிக் கூறியதை அழுதும், சிரித்தும் பேசினார்கள். மேலும் " ஸ்ரீசங்கரர் அவதார புருஷராக எப்படி இருந்தார்கள் " என்பதை ஞானசக்தி விரிவாகக் கூறியதையும் சொன்னார்கள்.

பின்பு " சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோராயினும் பொறுப்பது கடனே "—

என்றபடி " நான் ஏதாவது குற்றம் செய்திருந்தாலும், சிஷ்யர்கள் செய்த குற்றமும் பொறுப்பாயாக "—என்று ஞானசக்தியிடம் கேட்டுக் கொண்டார்கள்.

8. சூத்திரர்களுக்கு மூன்று வருஷங்களும், வைசியர்களுக்கு ஆறு வருஷங்களும், க்ஷத்திரியர்களுக்கு ஒன்பது வருஷங்களும், பிராமணர்களுக்கு பனிரெண்டு வருஷங்களும் ஞானம் சோதிக்கப்படுமென்றும் கூறினார்கள்.

9. மேலும் சில அருள்மொழிகள் பகன்றார்கள்.

" பேசக்கூடாதே பேசக்கூடாதே "

அதாவது ஞானிகள் பேசும்போது மற்றவர்கள் பேசக் கூடாதே யெனவும்,

2. " தொடக்கூடாதே தொடக்கூடாதே "

அதாவது ஞானிகளிடம் நெருங்கியிருக்கக்கூடாதே யென்பதை தொடக்கூடாதே யெனவும்,

3. " மனது ஒன்றிலும் ஒட்டக்கூடாதே
மனது ஒன்றிலும் ஒட்டக்கூடாதே "

அதாவது ஞானிகள் பேசும்போது மனம் ஒன்றிலும் பற்றாது ஒரே நிலையிலிருந்து கேட்கவேண்டுமென்பதை மனம் ஒன்றிலும் ஒட்டக்கூடாதே யெனவும் இது தவறினால் தோஷமெனவும் கூறினார்கள்.

Koviloor Digital Library

துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம்
சிவன் சக்தி ஏகசு சமரசமே
சந்தோஷ வாரி பெருகிடுமே—என

அருள்மொழி பொழிந்து எம்மதமும் சம்மதமாக இனிது முடித்தார்கள்.

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர் 630 307

வேணும் சண்முகநாதன் துணை.

அம்மையாரவர்களுடனிருந்து தான் கண்டு, கேட்டதை இங்கு வெளியிடப்பட்டுள்ளது.

இங்ஙனம்
சிஷ்யை து. மரகதவல்லி அம்மாள்
நாகபட்டினம்.

பின்பு தாயவர்கள் சுமார் நான்கு மாத காலங்கள் திருவாய் மலர்ந்து திருமறைப் பொருள்களை அவ்வப்போது எடுத்துக் கூறினர்கள். அனுபவ வாயிலாகவும் தோற்றத்தின் வாயிலாகவும் கண்ட உண்மைகளையும் எடுத்துப் புகன்றார்கள். இவ்வாறாக தாயவர்கள் தெற்கே குமரி தீர்த்தம் முதல் வடக்கே திருப்பதி வரையிலுள்ள தீர்த்த யாத்திரை சென்று, ஸ்தல தரிசனம் செய்தார்கள். பின்பு வேதாரண்யம் என்னும் ஸ்தலத்தில் பிலவ ஆண்டு ஆனிமீ 9-ம் நாள் திங்கட்கிழமையன்று காலை 6-மணியளவில் சற்குருநாதனருளால் மறுபடியும் தாயவர்கள் வாய்ப் பூட்டு போட்டது போல் உணர்ந்ததும் மௌனவிரதம் பூண்டார்கள்.

கிருஷ்ணசாமி.

Koviloor Digital Library

உ

ஓம் தத் சத்

பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீதிரிபுரா ரகசியம் — ஞான காண்டம்

வித்தியா கீதைச் சுருக்கம்

ஞானிகளின் நிலைமையைச் சொல்லும் விஷயத்தில், முன்னொரு காலத்தில் நடந்ததை தத்தகுரு வாயிலாக அறிந்ததைக் கூறுகிறோம்.

முன்னொரு காலத்தில் மிகப் பரிசுத்தமான சத்திய லோகத்தில் பிரம்மாவின் சபையிலே அதிசூக்ஷ்மமான விசாரணைகள் ஞானத்தைப் பற்றி ஏற்பட்டது. அப்போது ஜனகாதிகளும், வசிஷ்டர், புலஸ்தியர், புலகர், பிருகு, அத்திரி, ஆங்கிரசர், பிரசேதர், நாரதர், சியவணர், வாமதேவர், விசுவாமித்திரர், கௌதமர், சுகர், பராசரர், வியாசர், கண்வர், காசிபர், தக்ஷர், ஸுமந்து, சங்கர், லிகிதர், தேவலர், முதலிய இப்படிப் பட்ட மற்றும் அநேக ரிஷிகளும், முதிர்ந்த இராஜரிஷி களும், மேன்மை பொருந்திய ஞானவிசாரணைக்கு வந்தவராகி, அதிநுட்பமான ஞானவிஷயங்களை விசாரணை செய்து வந்தனர். அது சமயம் ரிஷிகளெல்லோரும் பிரம்மாவைக் கேட்டதென்னவென்றால்-"பகவானே! உலகத்திலுள்ள ஞானிகளில் நாங்கள் பராவர (உயர்வு, தாழ்வு) ஞானிகள். இப்படி எங்களுடைய நிலையானது பூர்வ சமஸ்காரங்களின் பேதத்தால் பலவாறாகக் காணப்படுகின்றது. எங்களில், சிலர் சதா சமாதி நிலையுற்றிருக்கின்றனர், சிலர் விசாரணையில் விருப்பமுள்ளவராக

Koviloor Digital Library

விருக்கின்ருர், சிலர் பக்தியினுல் உருகுகின்ருர், மற்றுஞ் சிலர் கர்மங்களைச் செய்தவராயிருக்கின்ருர், வேறு சிலர் வெளி நோக்கமுடைய நரனைப் போல விவகரித்தே வருகின்ருர். இவ்வாறு பல நிலைமையுடைய எங்களில் யார் தான் சிறந்தவர்கள் என்பதை எங்களுக்கு அருளல் வேண்டும். அவரவருடைய நிலையையே சிறந்ததென்று எங்களில் ஒவ்வொருவரும் கருதுகின்ருேம்" —என்று எல்லோரும் கேட்க, அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படா தென்று பிரம்மா, தம் மனதில் நினைத்துக்கொண்டு பதில் கூறுகின்ருர். "ரிஷிபுங்கவர்களே! இவ்விஷயத்தை நானும் தங்களைப் போலவே சந்தேகமற கிரகித்திருக் கிறேன். எல்லாம் வல்ல பரமசிவன் இதன் உண்மையை அறிந்தவராகையால் அவரிடம் சென்று, கேட்டு நாமெல் லோரும் அறிந்து கொள்ளுவோம்" — என்று கூறி விஷ்ணுவுடன்கூட சனகாதிகளான ரிஷிகளெல்லோரை யும் அழைத்துக்கொண்டு கைலாசத்தை யடைந்து மகா தேவனருகே சென்று ரிஷி சிரேஷ்டர்களுடைய கேள் வியை உலக சிருஷ்டாவான பிரம்மா கேட்டார். பரம சிவனும் இந்தக் கேள்வியைக் கேட்டு பிரம்மாவின் கருத்தை அறிந்தவராகி ரிஷிகளுக்குச் சிரத்தையில்லா மையால் நம்பிக்கை யுண்டாகமாட்டா தென்றும். "நான் ஏதாவது சிறிது கூறுவேனுல், ரிஷிகள் அதனையும் என் பக்ஷமென்று நினைத்துக் கொள்வார்களாகையால் என் மொழிகளும் பயனற்றதாகிவிடும்" — என்று தமக்குள் தீர்மானித்து அவர்களிடம் சொன்னதாவது. முநீந்தரர்களே! கேளுங்கள். நானும் இதனை விளக்க மாக அறிந்தவனல்லன். ஆகையால் பரமேசுவரியான வித்தை யென்ற பரதேவதையை நாமெல்லோரும் ஸ்துதி

Koviloor Digital Library

செய்வோம். அதன்மேல் அவளுடைய பிரசாதத்தால் கோரிய கூடார்த்தத்தைத் தெரிந்து கொள்வோம்".

இவ்விதம் கூறப் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலானவர்களுடன் ரிஷிகளெல்லோரும் மகேசியும், திரிபுரையும், சித்சரீரிணியுமான வித்தியா தேவியைத் தியானம் செய்தார்கள். சித்துருபியான திரிபுரை மேகமுழக்கம் போன்ற தொனியுடன் விண்ணிடத்துத் தென்பட்டாள். "தவ சிரேஷ்டர்களே எதற்காக நான் உங்களால் தியானிக்கப்பட்டேன்? அக்கோரிக்கையைத் தாமதமின்றிக் கூறுங்கள். என் பக்தர்களில் ஒருவருடைய கோரிக்கையை யாவது நிறைவேற்றுவதில் காலதாமதம் கூடாது." தேவியின் இவ்வித மொழிகளைக் கேட்டு தேவர்களனைவரும், மும்மூர்த்திகளுங்கூடத் தண்டாகாரமாக வணங்கிப் பின் பலவாறான தோத்திரங்களால் துதிசெய்தனர். அதன்பின்பு முனிவர்கள் பரையான வாணியினிடம் கூறியதாவது "ஏ! ஸ்ரீ வித்தையே உனக்கு நமஸ்காரம். நீ அகண்ட சிதேகரூபியானதால் உனக்கு முன்னும், பின்னும், கீழும், மேலும், பாரிசத்திலும் எல்லாப் பக்கங்களிலும் நமஸ்காரம்.

"தாயே! உன்னுடைய பரவடிவத்தையும், உனது ஐசுவரியத்தையும், உன் ஞானத்தையும், ஞானத்தின் பலனையும், அதன் முக்கிய சாதனத்தையும், அதன் சாதகத்தையும், அதனாலுண்டாகும் சித்தியையும், சித்தியின் முடிவான நிலையையும், சித்தரில் உத்தமர் இன்னாரென்பதையும் கிரமமாகக் கூறியருள வேண்டும். உனக்கு மீண்டும் எல்லாப் பக்கங்களிலும் தண்டம் சமர்ப்பிக்கின்றோம்." என்றார்கள்.

Koviloor Digital Library

இவ்விதம் கேட்ட பொழுது, மகா வித்தையானவள் ரிஷிகணங்களின் மீது இரக்கங்கொண்டு தெளிவாக விளங்குமாறு அழகு பொருந்திய வசனங்களால் கிரமமாகச் சொல்லத் தொடங்கினள். "ரிஷிகளெல்லோரும் கேளுங்கள். அவைகளைக் கிரமமாகச் சொல்லுகிறேன். சுருங்கக் கூறின் திரிபுரேசுவரியினது வடிவம் பரவடிவமெனவும், அபர வடிவமெனவும் இருவகைப்படும். எதனிடத்தே இந்த உலகம் யாவும் கண்ணுடியிற் பிரதிபிம்பம்போல உற்பத்தி, ஸ்திதி, லயமடைந்து எல்லோருக்கும் காணப்படுகின்றதோ, யாதொன்று தன்னை அறியாதவர்களுக்கு உலக வடிவமாகத் தோற்றுகின்றதோ, எதனை சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றனவோ இத்தகைய பராப் பிரதிபையே தேவியான என்னுடைய பரவடிவமென்று சொல்லப்படும். திரிபுர சுந்தர வடிவமாக அனுதி மிதுனமா யமர்ந்திருப்பதே என்னுடைய அபர வடிவமென்று தெரிந்து கொள்ளுங்கள். அவ்விதமே சதாசிவன், மகேசன் முதலான சகுண மூர்த்திகளிலும் பூஜிக்கத் தகுந்தவர்களுமாகிய இவர்களெல்லோரும் என்னுடைய அபர வடிவமாகவே கூறப்பட்டுள்ளார்கள். இவ்விதம் எங்கும் அந்தந்த வடிவமாக இருக்கும் என்னை, என் மாயையினுல் மோகமடைந்தவர்கள் ஒரு பொழுதும் அறியார்கள். அங்கங்கே பூஜிக்க தகுந்தவரும், பலனை அளிப்பவரும் என்னையன்றி வேறொருவருமில்லை. தேவியை எவ்விதம் பாவனை செய்கின்ருரோ அவ்விதமே என்னிடமிருந்து பலனை அடைகின்ருர்கள்,

என்னுடைய ஐசுவரியம் அபரிச் சின்னமானதென்று கூறப்படும். யாதொன்றையும் அபேக்ஷியாமல்

Koviloor Digital Library

அளவற்ற உலகங்களின் வடிவமாக, இரண்டற்ற சித் வடிவத்தை இழந்து விடாமல், ஸ்புரிக்கின்றேன். இவ்விதம் செய்தற்கரியதான பொருளை கற்பிக்கின்றதே என்னுடைய முக்கியமான ஐசுவரியம். மேலும் சூக்ஷம திருஷ்டியினால் என் ஐசுவரியம் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும், எங்கும் வியாபித்தவளாயும், ஒன்றிலும் பற்றில்லாது கேவலையாகவு மிருக்கின்றேன். ஜகத்தின் கண்ணுள்ள இந்த விசித்திரமான வியவகாரங்கள் பாதை (அழிவு) யின்றியதுபோல அனாதியனந்தமாக யாவருக்கும் பிரத்தியக்ஷமாக விளங்குவதேயாம்.

என்னுடைய ஞானமானது துவைதமென்றும், அத்வைதமென்றும் பற்பல பேதங்களாலும், வித்தியா சங்களாலும் வெகு விதமாயுள்ளது. அவைகளின் பலன்களும் இவ்வாறே வெகு விதமாயிருக்கும். தியான வடிவமான துவைத ஞானமும் பிராந்தி போன்ற நினைப்பேயானாலும், ஈசன் நியதிப்படி பலனைக் கொடுக் கக்கூடியது.

அபரஞானம் என்பது அனாதி மிதுன திரிபுரசுந்தர வடிவத்தைத் தியானம் செய்வதே. சிரேஷ்டமான பலனையடைய இது பரம்பரையான சாதனம். முக்கிய மானது. அத்வைத விஞ்ஞானமே பரவிஞ்ஞான மென்று கூறப்படும். வித்தியா தேவியான என்னை நீடித்து ஆராதனை செய்தால் சிரேஷ்டமான அத்வைத வித்தை அடையலாம். சித்தமானது ஆத்மாவினிடம் ஒன்று பட்டு சமாதியுற்றுப் பின்பு "அதுவே நான்" என்றுண் டாகும் அகண்டாகார ஞானமே பர விஞ்ஞானமெனப் பட்டது. சிரவணத்தினாலாவது, யுக்தியினாலாவது தேக

Koviloor Digital Library

விலக்ஷணன சிதாத்மா இருக்கிறுரென்று பரோக்ஷ மாகத் தோன்றுவதும், தேகாதிகளில் "நான்" என்று வருந்தோற்றம் நிச்சய ரூபமாகப் பரோக்ஷமாய் அகலு வதுமே அபர விஞ்ஞானம். திருசியங்கள் சற்றே தோன்றினலும் யாதொரு ஞானத்தினல், அவை ஒரு பொழுதும், ஓரிடத்திலும் தோன்ருததுபோலிருக்கின் றனவோ அதுதான் பரவிஞ்ஞானம். யாதொரு விஞ்ஞானத்தினல் அறியப்படாததாக ஒருகாலும் சற்ரு வது ஒன்றுமே யிருக்கமாட்டாதோ அதுவே அத்வைத விஞ்ஞானம். எவனிடத்தில் காமாதிவாசனைகள் சற் றேனுமில்லையோ, இருந்தாலும் பற்கள் பிடுங்கப்பட்ட பாம்புபோலாகுமோ அவனுடைய ஞானம் பரவிஞ்ஞான மெனப்படும்.

எவ்வகையான துக்கங்களும் விலயமாவதே விஞ் ஞானத்தின் பலன். அத்தியந்தமான பயமின்மையை அடைவதான மோக்ஷமே பலன் என்று கூறப்பட்டது. கற்பனையினலேயே பாபம் உண்டாகிறது. திட அத் வைத ஞானத்தால் துவைத கற்பனை நிலைத்திருக்க மாட்டா. துவைத சங்கற்பங்களை அகற்றி விட்டால் பயம் சற்றேனுமிராது. ஆகையினல் பலன் தனக்கு அன்னியமானதானல் அது உலகிலுள்ள திருசியங் களைப்போல முடிவுடையதே. அழியக்கூடியதான பல னுடன் கூடுவோனும் அழிந்து விடுகிறபடியால் "பல னுடன் கூடுவது" என்ற கொள்கை அறுவது திண்ணம். ஆகவே ஆத்மாவிற்கு அன்னியமாகாத மோக்ஷமென்ற யாதொரு பலன் கூறப்படுகின்றதோ அதுவே பயமற்றதான பலன். அறிபவனும், அறிவும்,

Koviloor Digital Library

அறிபடுபொருளும், பலனும் எப்பொழுது ஒன்ருகின் றனவோ அப்பொழுதுதான் எல்லாப் பயமும் நீங்கிய பரமமான மோக்ஷம்.

விகற்ப சங்கற்பங்களை யொழித்து, மூடத்தன்மை யின்றிச் சுத்தமான சொரூபத்தின் ஸ்புரனமுண்டா வதே ஞானமாகும். அஃது அறிபவனது சுத்த சொரூப மாக முன்னேயே யிருந்தாலும், பழக்கமின்மையால் குறிப்பிட்டறியப்படவில்லை. ஆதலால் ஞானமும் சொரூபமும் வேருனதன்ருகையாலும் மோகத்தினுல் குறிப்பிட்டறியா திருக்கிறபடியாலும் அந்த மோகத்தை அகற்றி அறியும்படி செய்வது குருவும் சாஸ்திரமுமே யன்றி மற்றன்று. அறிபவன் முதலியவைகளிடம் விளங் கும் மித்தையான இந்த பேதம் எப்பொழுது அகலு கிறதோ அப்பொழுதுதான் தங்கள் உண்மை வடிவத்தை அடைகின்றன. இதுதான் பலன் என்று கூறப்பட்டது.

ஞாதா முதற்கொண்டு பலன் வரையிலும் வாஸ்த வத்தில் ஒரு பேதமுமில்லை. வியவகார மாத்திரத்திற்காக அவைகளிடம் பேதம் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆத்மா ஒன்றுதானே மாயையினுல் அறிபவனென்றும், அறிவென்றும், அறிபடு பொருளென்றும், பலனென் றும் எம்மட்டிலும் விளங்குகின்றதோ, அதுவரையில் சம்சாரமானது மலைபோல் அசையாதிருக்கும். எக்கா லத்தில் இவைகள் எவ்விதமேனும் பேதமின்றி விளங் குமோ அப்போது காற்றினுல் சிதறப்பட்ட மேகம்போல் சம்சாரம் விலயமாகிவிடும்.

Koviloor Digital Library

இவ்விதமான மகா மோக்ஷத்திற்கு அதனிடமுண்டாகும் ஊக்கமே சாதனமாகும். ஊக்கம் பூரணமாயிருந்துவிட்டால் வேறு சாதனங்கள் வேண்டியதில்லே. ஊக்கம் மோக்ஷத்திற்கு முக்கிய சாதனம். "எவ்வாருயினும் சாதிக்கின்றேன்" என்பது தான் ஊக்கத்தின் சொரூபம். ஊக்கமுடையவன் எவ்விதத்திலும் முக்தனுகின்ருன். சீக்கிரமாவது, நீடித்த பின்னுவது முக்தியடைவது புத்தியினது நிர்மலத்தின் வித்தியாசத்தைப் பொருந்தியதாகும். புருஷார்த்தங்கள் யாவற்றையும் நிறைவேற வொட்டாது நாசஞ் செய்யக்கூடியதான வெகு தோஷங்கள் புத்தியினிடமிருக்கின்றன. இத்தோஷங்களால் கோரமான சம்சாரத்தில் ஜீவர்கள் சதா வெந்து வருந்துகின்ருர்கள்.

புத்தியின் தோஷங்கள் மூவகைப்படும். அதாவது நம்பிக்கையின்மை, காமவாசனே, ஜாட்டியதை என்ற மந்தமதி. நம்பிக்கையின்மையானது சம்சயமென்றும், விபரீதபுத்தி யென்றும் இருவகையாகும். இவைகள் மோக்ஷத்தைப்பற்றிய ஊக்கத்திற்கு முக்கியமான பிரதிபந்தங்கள். இவைகளுக்கு விரோதமான தீர்மானத்தால் இவ்விரண்டும் அற்றுவிடுகின்ற விரோதமான குதர்க்க சிந்தனேயே நம்பிக்கையின்மைக்கு மூலகாரணம். அதனேயொழித்து ஸத்தான தர்க்கத்தை அடிக்கடி அப்பியாசம் செய்தால் மூலகாரணம் வேரற்றுப் போவதுடன், நம்பிக்கையின்மைக்கு விரோதியான நிச்சயம் ஏற்படும். அதன் பின்பு சிரத்தை யுதிக்கின்றபடியால் நம்பிக்கையின்மை அழிந்துவிடும்.

சிரவணத்திற்குப் புத்தியின் காமாதிவாசனேகள் பிரதி பந்தங்களானவை. காமாதி வாசனேகள் அடர்ந்த

Koviloor Digital Library

புத்தியானது முயற்சி செய்யமாட்டாது. ஆசையே மூலகாரணம். ஆதலால் வைராக்கியத்தைப் பற்றிக்கொண்டு காமவாசனைகளை ஜயிக்கவேண்டும். "இது எனக்கு வேண்டும்" என்ற சொரூபத்தையுடைய ஆசையே காமமென்று சொல்லப்படும். இந்த ஆசை சாதிக்கக் கூடியவைகளில் ஸ்தூலமாயும், சாதிக்கப் பிரயாசையானவைகளில் சூக்ஷமவடிவமாயு மிருக்கும். திடமான வைராக்கியத்தைப் பற்றிக்கொண்டு காரியங்களிடம் அடிக்கடி தோஷத்தை நினைத்து, விஷயங்களிலிருந்தும் திரும்புவதே காமவாசனைகள் அற்றுப்போக உபாயம்.

மூன்ருவதாகச் சொல்லப்பட்ட ஜாட்டிய ரூபமென்ற புத்தியின் தோஷமானது அப்பியாசத்தினுல் எவ்விதத்திலும்வெல்லக் கூடியதன்று. மிகுந்த ஊக்கமுடையவனுகவிருந்தும் ஒருவனுக்கு ஜாட்டிய தோஷத்தினுல் சிரவணஞ் செய்யப்பட்டது புத்தியில் ஏருமாலிருக்கின்றதோ அஃது புருஷார்த்தத்தை நாசஞ்செய்யக்கூடியதான வன்மைபொருந்தியதாகும். ஆத்மதேவதையான என்னை சேவிப்பதன்றி இத் தோஷத்தை நாசஞ் செய்ய வேறு வழியில்லை. சேவையின் தாரதம்மியத்திற்குத் தகுந்தபடி ஜாட்டியத்தை நான் விலக்குகின்றேன். என்னையே சேவை செய்வதனுலும், நிஷ்காமனுக என்னையே சதா அடைவதனுலும், எல்லாச் சாதனங்களின் சம்பத்தியு முண்டாகின்றது. அப்படிப்பட்ட உபாசகன் சாதனங்களின் விக்கினங்கள் ஒழிந்தவனுகிக் கிருதார்த்தனுகின்ருன். ஊக்கமே முக்கிய சாதனம். ஊக்க முடையவனே பரமசாதகனென்று கருதப்படுவன். ஊக்கமுடை

Koviloor Digital Library

யவர்களிலும், என்னிடம் பக்தியுடையவன் யாவராலும் பூஜிக்கத்தகுந்த சாதகனுவான்.

ஸித்தியென்பது ஆத்மாவின் நிச்சயமும், தேகத்தினிடம் அனுத்மபாவனையுமே. தேகங்களில் எல்லோருக்கும் சந்தேகமற ஆத்மபாவனை யிருக்கின்றது. இப்பாவனை அகல்வதே மூடத்தன்மை யொழிந்ததான ஸித்தியெனப்படும். ஆத்மா எல்லோராலும் கைக்கொள்ளப்பட்டிருந்தாலும் தேகாதிமயமாகத் தம்மைப் பாவனை செய்கிறதேயன்றிக் கேவலாத்மாவாக நினைக்கிறதில்லை. இது காரணமாகத்தான் அஞ்ஞானிகள் யாவரும் மகா அனர்த்தங்களின் தொடர்பை அடைந்திருக்கின்றனர். ஆகையினுல் தேகாதிகளை விளக்குவதான கேவல சின்மாத்திரமே தான் (ஆத்மா) என்று சந்தேகங்கள் யாவற்றையும் நாசஞ்செய்யக் கூடியதான தீர்மானமே ஸித்தியென்று பிராஞ்ஞர்களாற் கூறப்பட்டுள்ளது. இஃதன்றி வேறு ஸித்திகளில்லை. ஆகாய கமனுதிகளும், அணிமாதிகளுமான ஸித்திகள் ஆத்ம விஞ்ஞான ஸித்தியின் பதினுறிலொரு கலைக்கு நிகராகமாட்டா. அந்த ஸித்திகளெல்லாம் தேச காலங்களினுற் பரிச்சின்னமானவையே. தன் ஆத்ம வித்தையும் சிவாத்மிகையுமான இந்த ஸித்தி அங்ஙனம் பரிச்சின்னமாகாது. மற்ற ஸித்திகளெல்லாம் ஆத்ம வித்தைக்கான சாதனங்களில் அடங்கியிருந்தாலும், ஆத்ம வித்தையை அடைவதில் விக்கின காரணங்களேயாகும். சாக்ஷாத் பிரம்ம பதவியையும் திருணத்திற்கு நிகராகப்பார்க்கும் தீவிரர்களான முமுக்ஷுக்களுக்கு இச்சித்துகள் காலத்தை கடத்துவதற்கே காரணமாகும்.

Koviloor Digital Library

ஆகையினால் ஆத்ம விஞ்ஞான ஸித்தியினால்தான் சோகத்தின் அத்தியந்த நாசம் ஏற்படுகின்றது. ஆனந்தேகரசத்தன்மை உதயமாகின்றது. மிருத்தியுவின் பாசத்திலிருந்து தப்புவிக்கக் கூடியதான ஸித்தியே ஸித்தி. வேறன்று.

இந்த ஆத்ம ஞான சித்தியானது பலவாறான அப்பியாசத்தின் பேதத்தாலும், புத்தியினது நிர்மலத்தின் ஏற்றக் குறைவினாலும் ஏற்படும். ஞான பரிபாகத்தின் பேதத்தினால் உத்தமம், மத்திமம், அதமம் என்று சுருக்கமாக மூவகைப்படும்.

ரிஷிகளே! உலகத்தில் துவிஜர்களால் பாடம் செய்யப்பட்ட வேதத்தின் அத்தியயனம் சமமாகவிருந்தாலும், மேதாவியானவன் தன் மிகுந்த அப்பியாச பலத்தினால் படனகாலத்தில் அநேக வியவகாரங்களைச் செய்தாலும், வேதத்தின் வர்ண ஸ்வரங்கள் பிசகிப் போகாமலிருப்பது உத்தம படனமாகும். வியாபார காலத்தில் சமாகிதனாகவிருந்து பின் வேதம் ஓதப்படுந்தருணத்தில் வியாபாரத்தில் அசமாகிதனாகி முன்போலவே தவறின்றி வேதம் ஓதுவது மத்திமம். அனுசந்தானம் எந்நேரமும் செய்வதனாலேயே அவ்விதம் பிழையின்றி ஓதுவதும். அஃதன்றித் தவறுதலுண்டாவதும் அதம படனமாகும்,

ரிஷிகளே! இங்ஙனமே ஆத்ம விஞ்ஞான சித்தியுமாம். மகா வியவகாரங்களிருந்தாலும் பிரதி சந்தான மில்லாமலும், அல்லது மற்ற வியாபாரங்களில்லாதிருக்கப் பிரதி சந்தான (ஏகாக்கிரம்) மின்றியும்,

Koviloor Digital Library

அல்லாது சதா பிரதி சந்தானத்துடனும் ஏற்படும் ஆத்மாவினது அவிஸ் மரணத்தின் (மறதியின்மையின்) தார தம்மியத்திஞல் உத்தமமென்றும், மத்திம மென்றும் அதமமென்றும் மூவகையாகின்றன. இவற்றில் உத்தமந் தான் ஞானசித்தியின் பராகாஷ்டை நிலையாக நிரூபிக்கப் பட்டுள்ளது. சாக்கிராவஸ்தையில் விசாராக்ஷணத் திற்கு (சரீராதிகளில் அகம்பாவம் ஒழிந்த சுத்தசின் மாத்திரத்தில் 'அகம்' என்றுள்ள நிலை) ஒத்ததான யாதொரு பரமமான நிலை அமையப்படுகின்றதோ அதுவே பரமமான உத்தம சித்தியாகும். வியவகாரங் களிலெங்கும் பிரயத்தனம் ஏதுவாகச் சமஸ்காரங்கள் எழும்பி எப்பொழுது பிரவிர்த்திகளுண்டாகின்றனவோ அப்பொழுதுதான் பரகாஷ்டை நிலையென்று கூறப் படும். யத்தனமின்றியே பரமமான ஸம்வேதனுத்மாவி னிடம் அழியாத யாதொரு நிலையுண்டோ அது எப்போது சித்திக்கின்றதோ அப்பொழுது தான் காஷ்டை நிலை வந்து கூடும். ஜாக்கிரம் முதலியவற்றில் வியவகரித்தாலும் உறங்குபவன்போல எப்பொழுதிருக் கிருனே அப்பொழுதுதான் அந்தச் சித்தி பூரணத் தன்மை அடைந்ததாகும்.

இவ்விதமான சித்தியை அடைந்தவனே சித்தர் களில் உத்தமனென்று சொல்லப்படுவன். நித்தியம் வியவகாரபரனுக விருந்தாலும் ஒரு பொழுதும் மேதாவி யானவன் சமாதியை விட்டகலான். தன்னுடைய அனு பவத்திஞல் தனக்குள்ளேயே பற்பலவிதமான ஞானி களின் நிலையை யாவன் சதா அறிகின்ருனே அவனே சித்தர்களில் உத்தமன். சம்சயமாவது காமமாவது

Koviloor Digital Library

எவனுக்குச் சற்றேனுமில்லேயோ, எவன் வியவகாரத்தில் நிர்ப்பயனு யிருக்கின்ருனே, எவ்வகையான சுக துக்கங்களேயும் உலக வியவகாரங்களேயும் யாவன் தன் ஆத்மாவிடத்திலேயே யிருப்பனவாக அறிகின்ருனே, எவன் அத்தியந்தம் பெத்தரும் முக்தருமான ஜீவர்கள் யாவரையும் ஸர்வாத்மாவான தன்னுத்மாவிடத்திலேயே காண்கின்ருனே தன்னுத்மாவிடத்திலேயே சதா பந்த ஜாலங்களே ஸ்பஷ்டமாக பார்க்கிறவனுக விருந்தும் மோக்ஷத்தை ஒருபொழுதும் யாவன் வேண்டாதிருக்கிருனே அவனே சித்தர்களில் உத்தமனுக மதிக்கப்படுவான். உலகில் சித்தோத்தமனுனவன் நானே யாவன், எங்களிருவருக்கும் ஒருகாலும் வித்தியாசமில்லே. ரிஷிகளே உங்கள் கேள்விகளுக்கு இங்ஙனம் மிக ஸ்பஷ்டமாக மறுமொழி கூறியிருக்கின்றேன். இதனேத் தெரிந்து கொண்டு ஒருகாலும் மோகத்தை அடையாதிருக்கக்கடவீர்.''

இதனே ரிஷிகள் எல்லோரும் கேட்டுச் சந்தேகத்தை யகற்றிச் சிவன் முதலிய லோகேசர்களே (சகுணமூர்த்திகளே) வணங்கி அவரவர்களுடைய இருப்பிடங்களுக்குச் சென்றனர். இந்த வித்தியா கீதையைச் சிரவணஞ் செய்தால் பாபசமூகங்கள் நாசமாகிவிடும். விசாரித்து மனத்தினுல் உள்ளத்திற் பதியும்படி செய்தால் தன்னுத்ம சாம்பிராஜ்ஜியத்தைக் கொடுக்கும். ஏனெனில் சாக்ஷாத் வித்தியா தேவியினுலேயே நிரூபிக்கப் பட்டிருப்பதனுலே தான் அனுசந்தானம் செய்தால் அத்தேவி பிரசன்னேயாகித் தானே சுயமாக ஞானத்தை அளிக்கின்ருள். சம்சாரமான அந்தகார சமுத்திரத்தில் மூழ்கி

Koviloor Digital Library

யிருப்பவர்களை உத்தாரணஞ்செய்ய இக்கீதை ஒரு தாரகமாகும்.

ஸ்ரீ திரிபுரா ரகஸிய ஞானகாண்டம்
வித்தியா கீதைச் சுருக்கம்.
முற்றிற்று.

ஸ்ரீ ராமலிங்க சுவாமியவர்கள் அருட்பா.

சிற்சபையும் பொற்சபையுஞ் சொந்த மெனதாச்சு
தேவர்களு மூவர்களும் பேசுவதன் பேச்சு
இச்சமய வாழ்விலெனக் கென்னையினி யேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றேடே போச்சு.

சிற்பொதுவும் பொற்பொதுவும் நானறியலாச்சு
சித்தர்களும் முத்தர்களும் பேசுவதென் பேச்சு
இப்பெரிய இவ்வுலகில் என்னையினி யேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றேடே போச்சு

வாழ்த்து

வாழ்க சங்கரன் மலரடி யென்றுமே
வாழ்க நங்குரு வழிவழி யடியவர்
வாழ்க விந்நூல் வையத்து ளோங்கியே
வாழ்க வோதுவார் வான்பத மெய்தியே.

Koviloor Digital Library

